# மட்டக்களப்பு மாவட்டத்தில் பறங்கியர் சமூகம் - ஓர் வரலாற்றுப் பார்வை

திருமதி. கிறிஸ்டினா நிரோஜினி மோசஸ்ரூபன், விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

*கிழக்கிலங்கையில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டமானது பல்லினப் பண்பாட்டைக் கொண்ட பிராந்தியமாகும். இங்கு பெரும்பான்மையாக தமிழரும் அடுத்தபடியாக முஸ்லீம்கள் சிங்களவர்கள், பறங்கியர்கள் ஆகியோர் வாழ்கின்றனர். இப்பிராந்தியமானது புராதன காலம் முதலாக பல ஆட்சியாளர்கள் ஆளப்பட்டதுடன், 16 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பியர் ஆதிக்கத்திற்குட்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. தங்களது குடும்பத்துடன் வருகைதராத போத்துக்கேயர் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்தமையால் 'பறங்கியர்' எனும் புதிய சமூகம் மட்டக்களப்பில் அறிமுகமானதுடன் புதியதொரு பண்பாட்டு அம்சமும் அறிமுகமாகியது. மட்டக்களப்பில் வாழ்கின்ற பறங்கிய மக்களின் பண்பாட்டில் மேற்கத்தைய முறையுடன் சுதேச மக்களின் பண்பாட்டுக் கூறுகளும் கலப்புற்றுக் காணப்படுகிறன. ஆயினும் தமது மூதாதையரால் கடைப்பிடிக்கப்பட்ட சில பண்பாடுகளை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றமை சிறப்பிற்குரிய விடயமாகும். திருமண நடைமுறைகள், கலைகள், உடை, உணவு, மொழி என்பனவற்றில் இவர்களது பண்பாட்டை இன்றும் நாம் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. மட்டக்களப்பு பண்பாடுகளை பறங்கியரும் பறங்கியரின் சில பண்பாடுகளை மட்டக்களப்பு மக்களும் தம்மிடையே ஈர்த்துள்ளனர் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *பறங்கியர், பண்பாட்டம்சங்கள், மட்டக்களப்பு*

## 1 அறிமுகம்

பதினாறாம் நூற்றாண்டில் போத்துக்கேய படைத்தளபதியான லோறன்ஸ் டி அல்மெய்டா கடுமையான காற்றின் காரணமாக எதிர்பாராமல் இலங்கையின் காலித்துறைமுகத்திற்கு அண்மையில் கரை சேர்ந்தார். போத்துக்கேயரின் முக்கிய நோக்கம் சமய பரப்புதலும் வியாபாரமுமாகும். சமகாலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி தமது மேலாதிக்கத்தை கோட்டை, யாழ்ப்பாண அரசுகளில் படிப்படியாக விஸ்தரித்தனர். இவர்களில் பலர் இலங்கையிலுள்ள சிங்கள தமிழ் பெண்களை திருமணம் செய்து இங்கேயே நிரந்தரமாக வாழ்ந்தனர்.

1549 இல் மட்டக்களப்பை கைப்பற்றிய போத்துக்கேயர் 1658 இல் ஒல்லாந்தர் கைப்பற்றும் வரை தம்வசம் வைத்திருந்தனர். பறங்கியர் எனும் பதம் இந்தியாவிலிருந்து வந்ததாகும். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைத் துரத்திய பின்னர் பறங்கிகளின் வாரிசுகளை திருமணம் செய்து பறங்கியரின் மொழியான கிரியோல் மொழியைப் பேசினர். பறங்கியரை திருமணம் செய்தனை தொடர்ந்து இவர்களும் பறங்கியர் என்றழைக்கப்பட்டனர். இன்று இச்சமூகம் தங்கள் இனத்துக்கிடையிலான திருமணத்தொடர்புகளால் வாழ்ந்து வருகின்றனர். 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 0.5 சதவீத பறங்கியர் இம்மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர் (Census of Population and Housing of Sri Lanka, 2012). மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாள 900 பறங்கியர் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் பனிச்சையடி, களுவங்கேணி, இருதயபுரம்,

டச்பார், புன்னைச்சோலை, கல்குடா, கூழாவடி, சின்ன உப்போடை, புளியங்குடா, தாண்டவன்வெளி, கல்லடி, ஏறாவூர், தன்னாமுனை, வாழைச்சேனை, விநாயகபுரம் ஆகிய இடங்களில் வாழ்கின்றனர்.

### 1.1 ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது மேல்வரும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

01. மட்டக்களப்பு மாவட்ட பறங்கியர் சமூகம் பற்றிய முழுமையான எந்தவொரு ஆய்வும் இடம்பெறாமையால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

02. மட்டக்களப்பு பறங்கியரின் கலாச்சார அம்சங்கள் சுதேச மக்களது பண்பாடுகளில் எந்தளவிற்கு தாக்கம் செலுத்துகின்றதென்பதை ஆய்வுசெய்தல்.

03. சமகாலத்திற்குரிய பறங்கியர் சமூகத்தில் போர்த்துக்கேய ஒல்லாந்தப் பண்பாடுகளைக் கண்டறிதல்.

04. பறங்கியர் சமூகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தல்.

### 1.2 ஆய்வின் கருதுகோள்

பறங்கியர்கள் சுதேச மக்களுடன் கலப்புற்று தனித்துவ பண்பாட்டம்சங்களைக் கொண்டு இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

### 1.3 ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்த்துக்கேயர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட பறங்கியர் சமூகம் சுதேச இனத்துடன் கலப்புற்றுள்ளது. மருவிச் செல்லும் இச்சமுகத்தை அடையாளப்படுத்தல்.

### 1.4 ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு சமூகவியலை மையமாகக் கொண்ட வரலாற்று ஆய்வாக அமைந்துள்ளது.

### 1.5 ஆய்வு மூலங்கள்

இவ்வாய்வுக்காக முதலாம் நிலை தரவுகளாக மட்டக்களப்பு பறங்கியர் சமூகத்தவருடனான நேர்காணல்கள், மட்டக்களப்பின் நிர்வாக அறிக்கைகள், புள்ளி விபரங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் அமைந்துள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக பறங்கியர் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் அமைந்துள்ளன.

## 2. மட்டக்களப்பு மாவட்டத்தில் பறங்கியர் சமூகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர், முஸ்லீம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் போன்ற பல்லின மக்கள் வாழ்கின்றனர். மட்டக்களப்பில் இனத்துவ ரீதயில் பறங்கியர் சமூகம் முக்கியம் பெற்றுள்ளமையை 2012 சனத்தொகைக் கணக்கெடுப்பு எடுத்துக் காட்டுகின்றது.

| இனம் | சனத்தொகை | மொத்த சதவீதம் |
|---|---:|---:|
| இலங்கைத் தமிழர் | 381,285 | 72.6% |
| முஸ்லீம்கள் | 133,844 | 25.5% |
| சிங்களவர் | 6,127 | 1.2% |
| பறங்கியர் | 2,794 | 0.5% |
| இந்திய தமிழர் | 1,015 | 0.2% |
| ஏனையோர் | 77 | 0.0% |
| மொத்தம் | 525,142 | 100% |

Sources: Census of Population and Housing of Sri Lanka, 2012


1981 – 2012 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பில் வாழ்ந்த பறங்கியர் சமூகத்தின் தனித்துவத்தை சனத்தொகைக் கணக்கெடுப்பின் மூலம் அவதானிக்கலாம்.

| ஆண்டு | மொத்த சனத்தொகை | இலங்கைப் பறங்கியர்களின் எண்ணிக்கை | மட்டக்களப்புப் பறங்கியர்களின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|
| 1981 | 14,846,750 | 39,374 | 2,292 | 5.8% |
| 2001 | 16,929,700 | 35300 | 2,428 | 6.8% |
| 2012 | 20,359,439 | 38,293 | 2,814 | 7.3% |

Sources: Department of Census & Statistics, Sri Lanka.

மட்டக்களப்பில் பறங்கியர் 1546 – 1638 வரையான காலப்பகுதியில் நிலைகொண்டிருந்தனர். தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்ததன் மூலம் மட்டக்களப்பில் பறங்கியர் சமூகம் உருவானது. கத்தோலிக்க சமயம் சாராத கிறிஸ்தவர்களாக ஒல்லாந்தப் பறங்கியர் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தனர். 1824 எட்வேட்பான்ஸ் மேற்கொண்ட சாதிக்கணக்கெடுப்பு 1827 திருத்தத்துடன் வெளியிடப்பட்டது. இதில் போர்த்துக்கேயர் 76 பேரும், ஒல்லாந்தர் 215 பேரும் மட்டக்களப்பில் வாழ்ந்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (வெல்லவூர்க்கோபால் 2011:200).

1956 காலப்பகுதிக்குப் பின்பு இலங்கையிலிருந்து பல பறங்கியர் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. ஏனெனில், இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரான காலப்பகுதியில் தங்கள் குழந்தைகளுக்கான எதிர்காலத்தைக் இங்கு காணாததன் விளைவால் அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு குடிபெயர்ந்தனர். மேலும் காலநிலை மாற்றங்கள், அரசியல் சிக்கல்களும் காரணமாகியது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக அவர்களின் சனத்தொகையில் சரிவு காணத்தொடங்கியது. சகோதர இனங்களுடனும் கலப்புறும் நிலையும் மாற்றம் பெற்றுள்ளது. சுனாமியின் போது மட்டக்களப்பில் டச்பார் பகுதியில் வாழ்ந்த அதிகமான பறங்கிகள் பாதிக்கப்பட்டனர்.



ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது.

### 3. பறங்கியர் சமூகப் பண்பாடு

#### 3.1 சமயம்

மட்டக்களப்பில் போர்த்துக்கேய பறங்கியர் மூலமாக ரோமன் கத்தோலிக்கமும் ஒல்லாந்தப் பறங்கியர் மூலமாக புரட்டஸ்தாந்து சமயமும் கடைப்பிடிக்கப்பட்டது. இதன் மூலம் பறங்கியர் மத்தியில் கத்தோலிக்கமும் புரட்டஸ்தாந்து சமயமும் காணப்படுகின்றது. பறங்கிய இனத்தினரை திருமணம் செய்யும் வேறு சமயத்தவர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறியே திருமணம் செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்களின் சமயம் சார்ந்த

சடங்குகளும் பறங்கிய மக்களின் சடங்குகளும் ஒரே தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றது. பறங்கியர் சமூகத்திடம் காணப்படுகின்ற சமயம் தொடர்புடைய சடங்குகளை அவர்களுக்குரிய தனித்துவமாக சமயச்சடங்குகள் எனக் கூறமுடியாதுள்ளது. கத்தோலிக்க சமயத்தை தழுவிய கிறிஸ்தவர்கள் சாதியடிப்படையிலும் தங்களுக்குரிய ஆலயங்களை அமைத்துக்கொண்டனர். புளியந்தீவில் வெள்ளாளர், சிகை அலங்கரிப்போர், பறங்கியர் ஆகியோர் புனித மரியாள் ஆலயத்தினைக் கட்டினர். புனித கப்பலேந்தி மாதா கோயில், அந்தோனி தேவாலயம் (Antonys Church) போன்ற பல தேவாலயங்களை மட்டக்களப்பில் அடையாளப்படுத்த முடியும்.

### 3.2 திருமண முறைகள்

பறங்கியரின் திருமணம் அவர்களது இனத்துக்குள்ளேயே பேச்சுவார்த்தை மூலம் நடைபெறுகின்றது. தமிழர்களின் திருமணமுறை கலப்புற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மாப்பிள்ளை கேட்டுப்போதல், மணமகன் வீட்டார் பெண்வீட்டிற்கு வரும்போது அன்பளிப்பாக குடிபானங்கள், சட்டை முதலியவற்றுடன் வருதல், திருமணத்திற்கு நல்ல நாள் அல்லது வசதியான நாள் குறிக்கப்படுதல், திருமணத்துக்கு முன் அவரவர் பங்குக்கோயில் பாதிரியாரிடம் அறிவிக்கப்பட்டு வார்த்தைப்பாடு இடம்பெறுதல், குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் பெறுதல், கல்யாணம் பற்றிய முதலாம் கூறல் கொடுக்கப்படுதல், ஞாயிற்றுக் கிழமைகளில் 3 வாரங்கள் அறிவிக்கப்படல், மோதிரங்களை மாற்றுதல், திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டில் மணவறை அலங்கரித்தல், மணமக்களின் சம்மதம் கேட்டு கரங்களை இணைத்து விடுதல், பூஜை நடுவில் மணமக்களுக்கு தேவ நற்கருணை வழங்கப்படுதல், ஆலயத்தில் திருமணப்பதிவு இடம்பெறுதல், பாதிரியார் ஆசியைப் பெறுதல், இசைக்குழுவின் இசை முழங்க மணமக்கள் வரவேற்கப்படுதல், தாக்கீஸ் குத்துதல், கேக் வெட்டுதல், வைன் பரிமாறல், பாரம்பரிய நடனம் இடம்பெறுதல், விருந்து இடம்பெறுதல், முதலிரவுக்கு அனுப்புவதற்கு பாட்டு பாடுதல், முதலிரவிற்கு சென்றவர்களை துயில் எழுப்புதல், மாப்பிள்ளைச் சாப்பாடு இடம்பெறுதல், கால்மாறிப் போதல் என்பன முக்கிய நிகழ்வுகளாகும். பறங்கிகளிடையே தாலி கட்டும் வழக்கம் இல்லை. மேற்கத்தைய நடனமுறை இவர்களிடம் காணப்படுகின்றது. இவர்கள் கலாசாரத்தில் மதுபானத்துக்கு முக்கிய இடமுண்டு.

### 3.3 கலைகள்

திருமண வைபவத்தில் தேவாலய பூசை முடித்து மண்டபத்திற்கு வரும்போது அவர்களை கலாசாரப்படி வரவேற்பதற்கென்றுள்ள வரவேற்பிசையை இசைப்பர். பின்பு கேக் வெட்டுதற்கான இசை இசைக்கப்படும். கப்பிறிஞ்ஞா (Kafringha), லான்ஸஸ் (Lancers) என்ற இரண்டு விதமான நடன வகைகள் இவர்களிடம் காணப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் ஐந்து வகைகள் உள்ளன. ஒவ்வொரு நடனத்திலும் நான்கு சோடிகள் உண்டு. இதில் நான்கு பெண்களும் நான்கு ஆண்களும் கட்டாயம் இடம்பெற வேண்டும். மணமகன் - மணமகள், மணமகனின்

தோழன் - மணமகளின் தோழி, மணமகனுடைய பெற்றோர், மணமகளது பெற்றோர் போன்ற நான்கு சோடிகள் விறுவிறுப்பாக ஆடும் நடன வகையாக கப்பிறிஞ்ஞா காணப்படுகின்றது. லான்ஸஸ் எனும் நடனம் வேகம் குறைந்த மென்மையான ஒரு நடன வகையாகும். இவ்விரு நடனங்களிலும் வெவ்வெறு விதமான இசை, ராகம் என்பன ஒவ்வொரு பகுதிக்கும் வித்தியாசமானதாக இசைக்கப்படும். லான்ஸஸ் மேடை நிகழ்ச்சிகளில் நிகழ்த்தப்படும் ஆடல் வகையாகும். லான்ஸஸ் பறங்கியரிடத்தில் அதிகமாக ஆடப்படுவதில்லை.

பாவனையிலுள்ள இசைக் கருவிகளாக வயலின், கிற்றார், பஞ்ஞோ, ரபான், சல்லாரி, ஓர்கன், பியானோ, செக்ரோடியன், Tringle என்பன ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட போதும் தற்போது இவ்வாத்தியங்களை இசைக்க கூடிய கலைஞர்களின் பற்றாக்குறையினால் கிற்றார் மட்டுமே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. தேவாலயங்களிலும் தனியாக ஒரு இசைப்பாணியில் பாடல்கள் இசைப்பதற்கென்று பாடல் குழு (Quarier) நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களே Organ வாத்தியத்தினை இசைத்து பாடல்களினைப் பாடுவர்.

இவர்களுடைய இப்பாரம்பரிய கலையானது நின்றுவிடாது இளைய சமூகத்தவர்களுக்கு பயிற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் மட்டக்களப்பில் அமைந்த Burgher Union வயலின், கிட்டார், ரபான், நடனங்கள் போன்ற பயிற்சிகளை வார இறுதி நாட்களில் பயிற்றுவித்து வருகின்றது.

கத்தோலிக்க சமயம் சார்ந்த சடங்கு முறைகள் மட்டக்களப்புப் பண்பாட்டில் ஊறியுள்ளன. புதுவருடப்பிறப்பு, இயேசு உயிர்ப்பு, இயேசு பிறப்பு போன்ற விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க கிறிஸ்தவ மத உண்மைகளை நிகழ்த்திக் காட்டும் வகையில் மட்டக்களப்பில் இருந்த வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை மதப் பிரச்சார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தினர். இது கத்தோலிக்க கூத்து என்ற பெயரில் என்றும் மட்டக்களப்பில் இடம் பெற்று வருகின்றது. திருமணம் நடைபெற்ற இரவில் அங்குள்ள உறவினர்கள் இணைந்து நடனமாடும் வழக்கமும் காணப்படுகின்றது.

### 3.4 கட்டிடக்கலை

இவர்களது கட்டிட அமைப்பு முறையானது போர்த்துக்கேய கட்டடப்பாணியாக அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் டச்சுக்காரர் ஆகிய இருசாராரும் தத்தம் சமய சார்பான தேவாலயங்களைக் கட்டினர். போர்த்துக்கேயர் இந்து கோயில்களை இடித்து அவற்றின் பொருட்களை பயன்படுத்தியும் தமது தேவாலயங்களை கட்டினர். டச்சுக்காரர் போர்த்துக்கேயரின் தேவாலயங்களை தாக்கினர். இந்தியக் கலைமரபையொட்டி வளர்ந்த மட்டக்களப்பு பிரதேச கட்டிடக்கலை மரபுடன் மேலைத்தேய கட்டிடக் கலைப்பாணியின் செல்வாக்கும் கலப்புற்றுள்ளது.

இவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்கள் சிறிய கோயில்களாயினும் கற்களை கொண்டு மிக நேர்த்தியான முறையில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன. இவை இரு பக்க மண்டபங்களையும் மைய மண்டபத்தினைக் கொண்டதாக பெருமளவுக்கு காணப்பட்டதுடன்

வளைவுடன் கூடிய வாயில்களையும் உச்சியில் சிலுவை வடிவிலான தூணென்றினையும் கொண்டிருக்கும். கோயிலின் பீடமானது அனேகமாக அரை வட்டத்தினைக் கொண்டதாக காணப்படும். இதனை மட்டக்களப்பிலுள்ள தேவாலயங்களில் காணமுடிகின்றது. மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் உள்ள கப்பலேந்தி மாதா தேவாலயம் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட பழைய ஒரு தேவாலயமாக காணப்படுகிறது. பறங்கியர்கள் கட்டிடங்கள், வீடுகள் கட்டும்போது கராதி (Garathi) போட்ட வீடுகளையே விரும்பினார்கள். தாழ்ந்த கூரைகள் கொண்டு அமைக்கப்பட்டன. அரை மதில் எழுப்பி மர வேலைப்பாடு கொண்ட தன்மையானதாக கட்டிடம், விறாந்தை அமைப்பு என்பன இவர்களது கட்டிட அமைப்பு முறையினை சுட்டுகின்றன. மட்டக்களப்பில் அநேக வீடுகளில் விறாந்தை அமைப்பினை அவதானிக்க முடிகின்றது.

பறங்கியரின் பிரதான தொழிலாக தச்சுத் தொழிலே காணப்படுகின்றது. வீட்டிற்கு தேவையான கதவு, யன்னல், கதிரை, மேசை, அலுமாரி, போன்ற தளபாடங்களை மிக அழகாகவும், நேர்த்தியாகவும், வடிவமைக்கும் திறமை படைத்மதவர்கள். இன்று வரை மரவேலையில் சிறப்பான செயலாற்றத்தை வெளிப்படுத்தியவர்களாக பறங்கியரே காணப்படுகின்றனர். அரசாங்க சேவைகளில் தங்களை இணைந்து சேவை புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### 3.5 மொழி

போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் அவரவர் மொழியே உத்தியோகபூர்வமான மொழியாக விளங்கியது. போர்த்துக்கேய ஒல்லாந்து மொழிச் சொற்கள் தமிழ் சிங்கள மொழிகளுடன் கலப்புற்றுள்ளது. மட்டக்களப்பு மக்கள் மத்தியில் இச்சொற்கள் காணப்படுகின்றன. மேசை, பேனா, கடதாசி, அலுமாரி, போத்தல், பாண், கோவா, அன்னாசி, ஜன்னல் ஆகிய பொதுப் பொருட்களின் பெயர்கள் போத்துக்கேய பறங்கியரிடமிருந்து பெற்றுக்கொண்டவையாகும். பணிஸ், பாண், அச்சு, கேக், போஞ்சி, விறாந்தை, நொத்தாரிசு போன்ற சொற்கள் டச்சிலிருந்து பெறப்பட்டவையாகும். மட்டக்களப்பு மக்களின் சொற்பயன்பாட்டில் இதனை அவதானிக்கலாம்.

போத்துக்கேய மொழி கிரியோல் மொழி என அழைக்கப்படுகிறது. இந்த மொழியினை டச்சுக்காரரும் பேசினர். இவ்மொழி வீட்டு வழக்கில் தற்போதும் பேசப்பட்டு வருகின்றது. பறங்கியர் இறப்பின் போதும், மணமகன் விருந்தின் போதும் கட்டாயம் பயன்படுத்தப்படுகின்றது.

போ(டீழ)ம் (Good), மாள் (Bad), அளகிரிய (Happy), சயான் (Sad), அனோதி (Night), திதிய (Day), பார்த்து (Near), லோஞ்சி (Far), ரீவா (Top), பா(டீய)சு (Bottom), பராங்கு (White), பிராத்து (Black), கேந்தி (Hot), வி(குந)ரீவ் (Cold), ஆள்து (Tall), மாய் (Mother), நோவ் (New), வேய் (Old), கும்பிரீது (Long), கூர்த்து (Short), தோசி (Sweet), அசாது (Sour), பிக்கினின் (Small), கிறாந்தி (Big), கோர்த்து (Fat), மாகுரு (Thin), லே(டுய)வி (Easy), கஸ்திவ் (Difficult) றீ (Laugh), சு(ஊர)ரா (Cry), குயர (Spoon), பா(குய)க்க (Knife),

கார்வூ(குர) (Fork), ராலூ (Scrapper), சூப்பு (Window), கோப்ப (Cup), பஸ்சீன் (Plate), பனால (Pot), திசாள (Pan), பென்னர (Seive), பிலான் (Mortar), சுவீ(குந) (Pestle), பாய் (Father) போன்ற சில சொற்கள் எடுத்துக்காட்டுக்களாகும்.

பறங்கிய மொழியை அவர்கள் வெளிப்படையாக பேசுவதை தவிர்த்து வருகின்றார்கள். எவ்வாறு இருந்த போதிலும் இந்த மொழியை மட்டக்களப்பில் தற்காலம் வரை நிலைத்திருக்கச் செய்த பெருமை இம்மக்களையே சாருகின்றது.

### 3.6 பெயர்கள்

பறங்கியரிடம் காணப்பட்ட தனிப்பெயர்கள் கத்தோலிக்க மதச் செல்வாக்குடன் வளர்ந்ததினால் இப்பெயர்கள் தமிழ், சிங்கள மொழிகளில் இன்றும் செல்வாக்குடைய சொற்களாகக் காணப்படுகின்றது. இந்தப் பெயர்களை பறங்கியர் தவிர்ந்த ஏனைய சமூகத்தவரும் பயன்படுத்துவதை மட்டக்களப்பு பிரதேசத்தில் காணமுடிகின்றது. ஆண்களிடம் கேபிரியேல், நிக்கலஸ், பெனான்டோ, மத்தியல், மார்டின் போன்றவற்றையும் பெண்களிடம் மேரி, லூசியா, மரியா போன்ற பெயர்களின் பயன்பாட்டைக் காணலாம்.

### 3.7 உணவு முறைகள்

பறங்கியர் மட்டக்களப்பில் பல்வேறு உணவு வகைகளையும் பயிர் வகைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். இனிப்பு வகைகள், பாண், றொபி, ஊறுகாய், கோவா, மதுபானம், வினாகிரி, கேக், கத்தரிக்காய், அன்னாசி, வத்தாளை, முள்ளங்கி, மரவள்ளி போன்றவற்றை குறிப்பிடலாம். இன்றுவரை மட்டக்களப்பு மக்களின் பயன்பாட்டில் காணப்படுகின்றன.

பறங்கியர் ஆரம்பகாலத்தில் சோற்றை பிரதான உணவாக உட்கொள்ளவில்லை. ஆனால் தற்போது சோற்றை பிரதான உணவாக உட்கொள்கின்றனர். பன்றி, மாட்டிறைச்சி உணவுகளை விரும்பி உண்கின்றனர். திருமணம் மற்றும் கொண்டாட்டங்களில் செய்யப்படுகின்ற உணவு வகைகளான கொப்புறோச்சி, கட்டவிக்க, பாசான், அச்சார், மஸ்கட், முஸ்தார முசுர் (சட்னி) என்பவற்றைக் குறிப்பிடலாம். ஏலம், கறுவா, கராம்பு என்பவற்றை அதிகமாக உணவின் சேர்க்கின்றனர்.

### 3.8 ஆடை அணிகலன்கள்

ஆடை வகைகளில் புதுமைகளை அறிமுகப்படுத்தியவர்களாவர். பாரம்பரிய ஆடைகளுக்குப் பதிலாக புதிய ஆடைகளை பயன்படுத்தினர். ஆரம்பகாலத்தில் போத்துக்கேயரால் பயன்படுத்தபட்ட ஆடைகள் போர்த்துக்கேய நிர்வாகத்தில் பலரும் பயன்படுத்தினர். இதன் விளைவாக பிற்காலத்தில் அது மட்டக்களப்பு மக்களுக்குரிய ஆடைகளாக மாற்றம் பெற்றது.

பறங்கியர் பாரம்பரிய ஆடையாக சட்டை திகழ்கின்றது. இருந்தபோதிலும் வேலை செல்லும் பெண்கள் சாரி அணிந்து செல்கின்றனர்.

பறங்கியர் மட்டக்களப்பில் உள்ள இனத்தவருடன் ஒப்பிடுகையில் முற்றாக மாறுபட்ட சமூக அமைப்பை கொண்டு ஐரோப்பிய சாயலில் காட்சியளிக்கின்றனர். இருந்த பொழுதிலும் சிலர் கருமேனியடையோராய் தோற்றமளிக்கின்றனர். தற்போதும் ஒரே குடும்பத்து பிள்ளைகளில் ஒருவர் ஐரோப்பிய சாயலிலும் மற்றையவர் கருமேனியுடையோராய் தோற்றமளிப்பதையும் காணமுடிகின்றது.

### 3.9 மரணச்சடங்கு முறைகள்

பறங்கியரின் மரணச்சடங்கில் ஒருவர் இறந்த பின் ஜெபம் கூறப்படும். அவை அதிகமாக தமிழில் சொல்லப்படுகின்றது. ஆனால் புதைக்குமிடத்திற்கு கொண்டு செல்லும் வழியில் பறங்கி பாஷையில் ஜெபம் சொல்லப்படும். புதைக்கும் மரபு போத்துக்கேயப் பறங்கியரிடமிருந்து வந்ததாகும். இறந்தவர்களை ஆலயத்துக்கு எடுத்துச் சென்று அங்கு வழிபாடுகள் நடாத்தி அதன் பின் மண்ணினுள் புதைக்கும் வழக்கத்தை கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர்.

## 4. முடிவுரை

மட்டக்களப்பு மாவட்ட பறங்கியர் சமூகத்தின் பண்பாட்டு மாற்றங்களை விபரிப்பதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மோனிஸ் பரெட்டோ தலைமையில் பறங்கிய குழுக்கள் வந்தடைந்தன. இராணுவ படைவீரர்களாக தொழிலாளிகளாக வந்த பறங்கியர் தம் குடும்பங்களுடன் வருகைதராமையின் காரணமாக இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து புதியதோர் இனத்தை தோற்றுவித்தனர். இவர்களின் மொழி கிரியோல் மொழியாகவும் கத்தோலிக்க சமயத்தை பின்பற்றுவோராகவும் காணப்பட்டனர்.

இவ்வினத்தாருடைய பண்பாடுகள் மேற்கத்தைய முறையை ஒட்டியே காணப்படுகிறது. இந்த பறங்கிய இனத்தினர் தமது மூதாதையரால் கடைப்பிடிக்கப்பட்ட பண்பாடுகளை இன்றுவரை கடைப்பிடித்தமை சிறப்பிற்குரியதாகும். திருமண நடைமுறைகள், கலைகள், உடை, உணவு, மொழி என்பனவற்றில் இவர்களது பண்பாட்டை இன்றும் நாம் அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பறங்கியரின் சில பண்பாடுகள் தனித்துவமானதாக இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு பண்பாடுகளை பறங்கியரும் பறங்கியரின் சில பண்பாடுகளை மட்டக்களப்பு மக்களும் தம்மிடையே ஈர்த்துள்ளமை இவ்வாய்வு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இச்சமூகம் சிறுபான்மையினரான காணப்படுவதால் அரசியல் பிரதிநிதித்துவமும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

**உசாத்துணை**


1. Vijayalakshmi. E., Cultural Minorities of Sri Lanka, International Center of Ethnic studies, 2005.
2. L.E.Blaze, History of Ceylon, Christian Literature Society for India & Africa, Colombo.
3. Siriweera.W.I., History of Sri Lanka from Earliest Times up to Sixteenth Century, Dayawansa Jayakoody & Company, Colombo, 2002, Pages 146 – 168.
4. Canagaretnam.S.O., Monograph of the Batticaloa District of the Eastern Province, HR.Cottle Government, Ceylon, 1921.
5. John W, Lange.S.J., Palm Fringed Cast History of Trincomalee – Batticaloa Diocese (1895 – 1967), The Ceylon Historical Journal Monograph Servies volume 29
6. Department of Census & Statistics, Sri Lanka, 2012.
7. Ferdinands, Rodney, Proud & Prejudiced: the story of the Burghers of Sri Lanka. 1995.
8. Smith, I.R., Sri Lanka Portuguese Creole Phonology, Dravidian Linguistics Association,1978.
9. Jayasuriya.D.S., Shihan, "The Portuguese Cultural Imprint on Sri Lanka“.1998.

10. Population by ethnic group, census years.1981 – 2012, Department of Census & Statistics, Sri Lanka.
11. கிருஷ்ணராஜா.செ., இலங்கை வரலாறு - பாகம் II, பிறை நிலா வெளியீடு, யாழ்ப்பாணம், 1998.
12. வெல்லவூர்க்கோபால், மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம், 2011.